# பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஒப்பீடு (பாடம்-3)

பழைய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கும் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கும் இடையே உள்ள மேன்மைகளை ஒப்பிட்டு பார்த்தல்

- பழைய ஏற்பாட்டு காலங்களிலும் ஜனங்கள் தேவனுடைய நன்மைகளை பெற்று ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்கின்ற நமக்கு பழைய ஏற்பாட்டு கால ஆசீர்வாதங்களை விட சிறப்பான, மேன்மையான ஆசீர்வாதங்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன என்று உறுதியாக கூறலாம். எப்படியென்றால் பழைய ஏற்பாட்டு காலங்களில் ஜனங்கள் ஆசீர்வாதங்களை முழுமையாக பெற்றிருந்தார்களானால் கிறிஸ்து உலகில் வரவேண்டிய அவசியமே இருந்திருக்காது அல்லவா! ஆகவே நம்முடைய இரட்சகர் இயேசு கிறிஸ்து உலகில் மனுஷரு கொண்டு வந்ததினாலே புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்கின்ற நமக்கு சிறப்பான மற்றும் மேன்மையான ஆசீர்வாதங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. உன்னதத்திலுள்ள சகலவித ஆசீர்வாதங்களினாலும் கர்த்தர் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.

கிருபை

பழைய ஏற்பாட்டிலே கிருபைக்கு “Hen” என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இரக்கம், நன்மதிப்பு, மனதுருக்கம் மற்றும் மற்றவர்கள் மேல் பாராட்டும் தயை என்றதான அர்த்தமாகின்றது. உதாரணமாக ஆதியாகமம் 6:8ல் நாம் பார்க்கின்றோம். நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது என்று சொல்லப்பட்டுள்ளதில் Charis என்கிறதான புதிய ஏற்பாட்டில் கூறப்படுகின்ற கிருபைக்கான வார்த்தையின் அர்த்தமுடையதாக இது காணப்படவில்லை. மாறாக Hen என்கிற வார்த்தைக்குரிய பொருளுடையதாகவே இங்கு கிருபை என்கிற வார்த்தை கூறப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் எபிரெயர் 10:19ல் “நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார்” என்றும் எபிரெயர் 8:8ல் இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது என்றும் நாம் வாசிக்கின்ற இவ்வசனங்களில் கிருபைக்கான “Charis” என்கிற கிரேக்க வார்த்தையையே பவுல் பயன்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டின் கிருபையை விளக்க பழைய ஏற்பாட்டில் இருந்து எந்தவொரு வார்த்தையும் பவுலால் மேற்கொள்காட்டி கூறமுடியவில்லை.

காரணம், பரிசுத்த ஆவியானவர் தம்முடைய ஜனங்களுக்கு எப்படிபட்டதான மேன்மை நிறைந்த கிருபையை கூற விரும்புகின்றாரோ, அதற்கு இணையான பொருளுடையதான கிருபையை பற்றிய வார்த்தை பழைய ஏற்பாட்டில்

காணப்படவில்லை. இதை நாம் தவறாகவும் புரிந்துகொள்ளக்கூடாது எப்படியென்றால், பழைய ஏற்பாட்டு காலத்தில் ஜனங்களுக்கு தேவனுடைய கிருபையும் அதனால் உண்டான ஆசீர்வாதங்களும் கிடைக்கவேயில்லை என்று கூறாமல், கிறிஸ்து உலகில் வந்ததினால் ஏற்பட்டிருக்கிற மேன்மை புதிய ஏற்பாட்டின் காலங்களிலுள்ள நமக்கு கிடைக்க பெற்றிருக்கின்றது என்பதையே கூறுகின்றோம்.

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள "Hen" என்கிற கிருபைக்கான வார்த்தை தேவனுடைய குணநலன்களைப் பற்றி சொல்லுகிறது. புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள Charis என்கிற கிருபைக்கான வார்த்தை சிறப்பும் மேன்மையும் நிறைந்த இயேசு கிறிஸ்துவின் செயல்களைக் குறித்து சொல்லுகிறது.

புதிய ஏற்பாட்டு காலத்திலுள்ள நமக்கு கிடைக்க பெற்றிருக்கிற இந்த Charis என்கிற பொருளுடையதான கிருபை இயேசு கிறிஸ்துவினாலே கிடைக்க பெற்றிருக்கிறது என்பதற்கான வசன ஆதாரங்கள்:- யோவான் 1:17, அப்போஸ்தலர் 15:11, 1 கொரி 1:3, 2 தீமோ 1:9, வெளி 22:21, எபேசியர் 1:6

பழைய ஏற்பாட்டு காலங்களில் வாழ்ந்தவர்கள் இந்த புதிய ஏற்பாட்டின் கிருபையை அடையவில்லை. வசன உதாரணம் எபிரெயர் 11:13

புதிய ஏற்பாட்டின் கிருபைக்கு கூறப்பட்டிற்கு Charis என்கிற வார்த்தைக்குரிய விளக்கங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

1. தேவனுடைய தெய்வீகமான இரக்கங்களும் தயவுகளும் நிறைந்த ஆசீர்வாதம்
2. கிருபையான பராமரிப்பு, உதவி, நன்மதிப்பு, லாபம், ஈவு நன்மை என்கிறதான ஆசீர்வாதங்கள்

புதிய ஏற்பாட்டு கிருபை விசேஷமானது ஏன்?

நமக்கு இரட்சிப்பை கொண்டு வருகிறது, மட்டுமல்ல நாம் நித்திய ஜீவனையும் இந்த கிருபையின் மூலமாகவே பெறுகிறோம். அப்போஸ்தலர் 18:27, யோவான் 20:3

மனந்திரும்புதலுக்கும் கிருபை அவசியம் என்பதை ரோமர் 2:4, அப்போஸ்தலர் 11:18 ஆகிய வசனங்களின் மூலமாக அறிகின்றோம். மட்டுமல்லாமல் கிருபையினாலேயே பாவமன்னிப்பும், நீதிமானாகுதல் என்கிற ஆசீர்வாதமும் நமக்கு உண்டாகிறது. ரோமர் 3:28

ஆதாமுடைய பாவம் நமக்கு மரணத்தை கொண்டு வந்தது, ஆனால் இயேசுகிறிஸ்துவின் கிருபையோ நமக்கு நித்திய ஜீவனை கொண்டு வந்தது.

நாம் நம்முடைய விசுவாசத்திலும், இரட்சிப்பிலும், ஆவிக்குரிய வாழ்வின் ஓட்டத்திலும் நிலைநிற்கிறதும் தேவனுடைய கிருபையினாலேயே.

கிறிஸ்தவ ஜீவியத்தின் அடிப்படையானது, இந்த கிருபையே என்று சொன்னால் அது மிகையாகாது.

<u>விசுவாசம்</u>

பழைய ஏற்பாட்டில் காணப்பட்ட விசுவாசத்தையும் புதிய ஏற்பாட்டிற்கான விசுவாசத்தையும் நாம் அறிந்து கொள்ளும்போது இக்காலத்திலே நாம் எப்படிப்பட்டதான விசுவாசமுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதனை அறிந்து, அப்படிபட்டதான விசுவாசம் உடையவர்களாகவே இருப்போம் என்பதில் ஐயமில்லை.

பழைய ஏற்பாட்டில் விசுவாசத்திற்கு கூறப்பட்டுள்ள வார்த்தை புதிய ஏற்பாட்டின் விசுவாசத்தை வெளிப்படுத்துகிற முழுமையான அர்த்தமுடையதாக இருக்கவில்லை. பழைய ஏற்பாட்டு விசுவாசம் என்பது நம்பிக்கை, உண்மை என்கிற பொருளுடைய அர்த்தத்திலே காணப்படுகிறது.

விசுவாசத்தின் முழுமையான உபதேசத்தை பழைய ஏற்பாட்டில் காணமுடியாது என்று “குன்கல்” என்கிற வேத வல்லுநர் கூறுகின்றார்.

பழைய ஏற்பாட்டு யூதவிசுவாசிகள் தேவன் மீது வைக்கிற நம்பிக்கையானது அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற பூரணமற்ற வெளிபாட்டின் மேலும், தேவனுடைய வாக்குதத்தத்தின்மீது வைக்கிற அடிப்படையான நம்பிக்கையை சார்ந்ததாகவே இருந்தது.

புதிய ஏற்பாட்டின் விசுவாசத்திற்கு முன் உதாரணமாக முன் அடையாளமாக கொடுக்கப்பட்டது தான் பழைய ஏற்பாட்டின் நம்பிக்கையே தவிர இது முழுமையானதல்ல.

பழைய ஏற்பாட்டு விசுவாசிகள், இனிவரப்போகிறதை நம்பினார்கள். உதாரணமாக வரப்போகிற மேசியாவை, அதைக் குறித்ததான வாக்குதத்தத்தை, தேவன் தங்களுக்கு தனிப்பட்ட விதத்தில் கொடுத்த வாக்குதத்தங்களையும் நம்பினார்கள்.

புதிய ஏற்பாட்டு விசுவாசம், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினால் நமக்கு கிடைத்திருக்கின்ற நாம் பெறுகின்ற ஆசீர்வாதங்களை குறிக்கின்றதாக காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டு விசுவாசம் என்பது பெற்றிருக்கின்ற அல்லது அடைந்திருக்கின்ற நிலையிலானதையேக் குறிக்கின்றது. (உதாரணங்கள்) யோவான் 1:12 – ஏற்றுக்கொள்ளுதல், கலாத்தியர் 3:2 – பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுதல்

புதிய ஏற்பாட்டு விசுவாசம் என்பது தேவன் நமக்குள்ளே வாசம்பண்ணுகிற அந்த அனுபவம், இதினால் நாம் தேவனுடைய தெய்வீக குண இயல்புகளை வெளிப்படுத்தி தேவனுக்கு மகிமை கொண்டு வருவதே.

ஆவிக்குரிய ஐக்கியம் என்பது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு கிடைக்கபெற்ற ஆசீர்வாதம் என்று கூறினால் அது மிகையாகாது.

பழைய ஏற்பாட்டு விசுவாசம் முன் அடையாளமான, உருவகமான நிலையிலேயே கூறபட்டிருக்கிறதே ஒழிய முழுமையானதாக இல்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நமக்கு முழுமையான விசுவாசம் கிடைக்கப் பெற்றிருக்கின்றது.

பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் மரணத்திற்கு பின்பு பாதாளத்திற்கு, இல்லாவிட்டால் பரதீசுக்கு போகிறதை நம்பினார்கள். சங்கீதம் 6:5, ஆதியாகமம் 37:35, பிரசங்கி 9:10 லூக்கா 16:19-31

பாதாளத்தைக்குறித்து அறிய "சியோல்" (SHEOL) என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டிலும் 'HADES' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டிலும் பயன்படுத்தப் பட்டுள்ளது. HADES என்பது பாதாளத்தின் ஒரு பகுதியில் ஆபிரகாமின் மடியில் லாசரு தேற்றப்படுகிற இடத்தையும் சீயோல் என்பது ஐஸ்வரியவான் மற்றொரு பகுதியில் வேதனையை அனுபவிக்கிற இடத்தையும் குறிக்கின்றதாக இருக்கின்றது. லூக்கா 23:43, மாற்கு 9:45, வெளி 20:13-15

புதிய ஏற்பாட்டு விசுவாசத்தின்படி மரணத்திற்கு பின்பு தேவனோடு பரலோகத்திலுள்ள நித்திய வீட்டிலே குடியிருக்கிற அந்த இடத்திற்கு செல்வோம் என்று 2 கொரி 5:8ல் வாசிக்கின்றோம்.

நம்முடைய கிறிஸ்தவ ஜீவயத்திற்கு மிகவும் முக்கியமான காரியங்களான கிருபையும் விசுவாசமும் பழைய ஏற்பாட்டு காலங்களை விட நம்முடைய இந்த புதிய ஏற்பாட்டு காலத்திலே எவ்வளவு மேன்மை நிறைந்ததாக காணப்படுகின்றது என்பதை நாம் அறிந்து கொண்டிருக்கின்றோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

கேள்விகள்

1. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவனுடைய கிருபையை பற்றி நாம் புரிந்துகொள்வதற்காக கூறப்பட்டுள்ள எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகளையும் அவைகளுடைய பொருள் விளங்க இப்பாடத்தில் கற்றுக் கொண்டிருக்கின்ற சத்தியங்களை சற்று விளக்கமாக கூறுக?
2. பழைய ஏற்பாட்டில் ஜனங்கள் பெற்ற தேவனுடைய கிருபையை விட புதிய ஏற்பாட்டில் ஜனங்கள் பெற்ற கிருபை விசேஷமானது ஏன்? என்பதை வசன ஆதாரத்துடன் கூறுக?
3. பழைய ஏற்பாட்டின் விசுவாசத்திற்கும் புதிய ஏற்பாட்டின் விசுவாசத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் என்னென்ன என்பதனை வசன ஆதாரத்துடன் கூறுக?